DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். STC.468/2016

**prosecution witness: PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : மகேஷ்வரி | | தொழில்/ பதவி | : | காவல் ஆய்வாளர், கோவில் காவல் நிலையம் |
| க/பெ. | : | முத்துகுமார் | வயது | : | 50 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>09.06.2026</u>

( 7ம் எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, 4, 5, 6 எதிரிகள் ஆஜர், 10ம் எதிரி குற்றமற்றுவிட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் நடந்து சென்றால் சுமார் 1/4 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 2 மணி நேரம் கழித்துதான் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 2 மணிநேரம் கழித்து பதிவு செய்யப்பட்டது. எப்.ஐ.ஆர்-ல் காலம் 8ல் காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக இந்த சம்பவத்திற்கு கிராம நிர்வாக அதிகாரிதான் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் கிராம நிர்வாக அதிகாரி அங்கு இல்லை அதனால் புகார் கொடுக்கவில்லை. இவ்வழக்கின் புகார்தாரர் உங்களுக்கு கீழ் பணிபுரியும் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அவரும் அங்கு நின்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். பிரிவு 30(2) காவல் சட்டம் அமலில் இருக்கிறது என்றால பொதுவாக தண்டோரா அடிக்கப்பட்டிருக்கும் என்றும் நோட்டீஸ் ஒட்டியிருக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறான நடைமுறை இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. பின்பற்றினோம் ஆனால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. உண்மையில் இந்த மாதிரி சம்பவம் நடந்ததிருந்தால் அப்போதே எதிரிகள் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்றாலும் அவ்வாறு யாரும் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

2. சிறப்பு சார்பு ஆய்வாளர் சொன்னதுபோல் இந்த வழக்கில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடத்திருந்தால் இடையூறு செய்ததாக கைது செய்யப்பட்டிருப்பார் என்றால் சரியல்ல. சட்ட ஒழுங்க பிரச்சனை ஏற்படும் என்பதால் அப்போது கைது செய்யப்படவில்லை. சம்பவ தினத்தில் கடற்கரை ஓரத்தில் சுமார் 500, 1000 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். அங்கு போய் போலீசார் கடற்ரையில் நிற்க கூடாது கலைத்ததின் பேரில் நாங்கள் தொழில் செய்யும் இடம் இதுதான் எங்களது உரிமைகளை கேட்டு அமைதியான முறையில் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் உரிமைகளை கேட்டு பெறுகிறோம் என்று சொன்னதால் எங்களை எதிர்த்தா பேசுகிறீர்கள் என்று கேட்டு நடக்காத சம்பவத்திற்கு இந்த எதிரிகள் மீது கிராம நிர்வாக அதிகாரி மூலம் புகார் பெறுவதற்கு பதிலாக தங்களுக்கு கீழ் பணிபுரியும் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களை வைத்து உண்மைக்கு மாறாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் ஒவ்வொறு சங்கத்திற்கும் பொருப்பாளராக உள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் விசாரணை என்ற பெயரில் எதிரிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து பின்னிட்டு வழக்கின் ஆவணங்கள் சம்பவ இடத்திற்கு செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. இந்த எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளை முறையாக விசாரிக்காமலும் நேரடியாக விசாரிக்காமலும் 161 வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கை பொறுத்தவரை பிரிவு 30(2) காவல் சட்டம் மாவட்ட ஆட்சியரால் எந்த காலகட்டத்தில் அமலில் இருக்கும் என்ற உத்தரவு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். கடற்கரைக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே சுமார் 1 கி.மீ. இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 1/2 கி.மீ. இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ. இருக்கும். சிறப்பு சார்பு ஆய்வாளர் நடராஜன், பொந்து முனியாண்டி, ராமச்சந்திரன் ஆகியோர்களிடம் மறுவாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் இந்த குற்றத்திற்கம் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.09 09:32:24 +0530